மேலப்பாளையத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் தற்போதுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 15 ஆயிரமாகும் என்று எனக்குத் தகவல் தரப்பட்டுள்ளது. மேலப்பாளையம் கிளை நிலையத்தில் தினசரி 50—க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்காக வருகின்றன. ஆகவே, அங்கே தற்போதுள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த அரசின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுகுறித்த கோப்புகளை அரசுக்கு அனுப்ப வேண்டப்பட்டுள்ளது என்பதையும் தங்களின் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

54—

கால்நடை மருத்துவமனை

***23526—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, நாட்டேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், நாட்டேரி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3725 மட்டுமே உள்ளதாலும், அதன் அருகில் 5 கி.மீ. தூரத்தில் பிரம்மதேசம் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதிநிலை காரணமாகவும், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, நாட்டேரி கிராமத்தில் எந்தவொரு கால்நடை கிளை நிலையமும்

2004 ஜூலை 28]

செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 55, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

55—

மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிகள்

***38284—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் தொடங்குவதில், மாசுக் கட்டுப்பாடு வாரியம் விதித்துள்ள நடைமுறைகளைத் தளர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களைக் காப்பாற்றுகின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உள்ளது. கடந்த கால தி.மு.க. அரசு சிறுதொழில்களைத் தொடங்கும்போது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாகக் கடுமையான விதிகளை விதித்து வந்துள்ளது. குறிப்பாக, Sago Factory, Milk Dairy, Foundry போன்ற சிறுதொழில்களைத் தொடங்க வேண்டும் என்றால், ஓடை, ஆறுகளுக்கு 5 கி.மீ. தூரத்திற்கு அப்பால்தான் தொடங்கவேண்டும் என்று விதிகள் உள்ளதாகத் தெரிகிறது. தற்போது மாசுக் கட்டுப்பாடு வாரியம், treatment plant — சுத்திகரிப்பு நிலையம் அமைத்த பிறகே, உரிமம் கொடுத்து வருகிறார்கள். சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் சுத்தப்படுத்தப்பட்ட பிறகு மாசு கிடையாது.*